125

உ

சிவமயம்.

கண்டனூர்

ஸ்ரீ

மீனாட்சிசுந்தரேஸ்வர

ரீடிங்ரூமின்

# அநுஷ்டான விதிகள்.

காரைக்குடி
தனவைசிய ஊழியன் அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது,
1921.

Q23:414
N21
175432

உ

சிவமயம்.

கண்டனூர்

# ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவர

ரீடிங் ரூமின்

# அநுஷ்டாநவிதிகள்.

ஸ்தாபநத்தின் பெயர்.

1. இந்தவாசகசாலை கண்டனூர் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவர ரீடிங் ரூம் என்ற பெயரால் அழைக்கப்பெறும்.

இருப்பிடம்.

2. தற்காலம் அதாவது மூலதிரவியம் விருத்தியாகி சொந்தக்கட்டிடம் உண்டாகும் வரையில் நிருவாக சபையாரால் தீர்மானிக்கப்பெறும் வாடகைக் கட்டிடத்திலோ வாடகையில்லாத கட்டிடத்திலோ இவ்வாசக சாலை நடைபெறும்.

கோள்கை.

3. கடவுளன்பு, அறிவுவிருத்தி, நேசம், ஒற்றுமை, சன்மார்க்கங்கள், தேகப்பயிற்சி, சுகாதாரம், பத்

திரிகைகள், புஸ்தகங்கள் பிற நன்மையான காரியங்கள் அபிவிருத்தி யடையச் செய்தலும், தீயகாரியங்களை விலக்குதலும் இதன் கொள்கையாம்.

### கால வரையறை.

4. இவ்வாசகசாலை காலை 7-மணிமுதல்இராத்திரி 7-மணி வரை பிரதிதினமும் திறந்து வைக்கப்பெறும்.

### மெம்பர்களின் தகுதி.

5. A. 1 கண்டனூர் யூனியன் எல்லைக்குள்வசிப்பவர்களும் 2. மேற்படி எல்லைக்குப் புறம்பே வசிப்பவர்களும் 3. வெளியூர்களிலிருந்து வந்து சிறிது காலம் தங்குபவர்களும் இதன் மெம்பராக அருகராவார்கள்.

B. மேற்கண்டவர்கள் முறையே 1. லைப்மெம்பர் 2. சாதாரண மெம்பர் 3. டெம்பரெரி மெம்பர் என்ற மூன்று வகுப்பில் ஒரு வகுப்பு மெம்பராக நாமம் பெறலாம்.

C. 10 வயதிற்குக் கீழுள்ளவர்கள் இதன் எந்த வகையான மெம்பராகவும் தகுதியில்லாதவராவர்.

D. டெம்பரெரி மெம்பர் 3 மாதம் வரையிற்றான் அவ்வகுப்பிலிருக்கலாம். அதற்குப் பின் மெம்பராக இருக்க விரும்பின் டெம்பரெரியில்லாத 1-வது லைப் மெம்பர், 2-வது சாதாரண மெம்பர் என்ற இரண்டில் ஒரு மெம்பராக இருக்கவேண்டும்.

### லைப்மெம்பர்கள்.

6. மாதச்சந்தாவிற்கு பிரதியாக ஒரே தடவையில் ரூபாய் நூற்றைம்பது முன் தொகையாகச் செலுத்து

Q23:414
N24

வோர் லைப்மெம்பராவர். அவ்வாறு ஆனபின்னர் பிரவேசக் கட்டணமாவது சந்தாவாவது செலுத்த வேண்டியதில்லை.

சந்தா விபரம்.

7. A. ஒவ்வொருவரும்வாசகசாலையின்மெம்பராகச் சேரும் காலத்து லைப்மெம்ப ரல்லாதவர்களில் சாதாரண மெம்பர் பிரவேசக் கட்டணம் ரூ 4-ம் மாதச் சந்தாவாயின் மாதாமாதம் பத்தாம் தேதிக்குள் ஒவ்வொன்றும் வருஷச்சந்தாவாயின் முன் தொகையாக செலுத்துகிற மாத முடிவிற்குள் ரூபாய் பதினொன்றும், ஆறுமாதத்திற்கு ரூபாய் 5 அணு 12-ம் செலுத்தவேண்டும்.

B. டெம்பரெரி மெம்பர் பிரவேசக் கட்டணமின்றி மாதாமாத ஆரம்பத்தில் ரூபாய் ஒவ்வொன்று மூன்று மாதம் வரை செலுத்த வேண்டும்.

C. கண்டனூர் எல்லைக்குள் வசிக்கும் கவர்ண்மெண்டு உத்தியோக்ஸ்தரும் கலாசாலை உபாத்தியாயர்களும் பிரவேசக் கட்டணமின்றி மாதம் ஒன்றிற்கு அந்தந்த மாத ஆரம்பத்தில் அணு 8ம் ஒரு வருஷத்திற்கு முன்தொகையாக ரூபாய்5 அணு8ம், ஆறுமாதத்திற்கு முன் தொகையாக ரூ 2 அணு 14ம் செலுத்த வேண்டும்.

D. மெம்பர்களாயிருந்து வெளியூருக்குப்போயிருப்பவர்கள் மூன்று மாதமானல் மாதச்சந்தா அணு 8ம் ஒரு வருஷத்திற்கு முன் தொகையாக ரூபாய் 5 அணு 8ம் ஆறு மாதத்திற்கு முன் தொகையாக ரூ 2 அணு 14ம் செலுத்த வேண்டும்.

E. மெம்பர் ஒருவர் ஒரு மாதத்தின் மத்தியிற் சேரினும் நீங்கினும் ஒரு மாதமாகவே பாவிக்கப்பெறும். ஆனல், அந்த மாதத்தில் சில நாட்கள்தான் மெம்பராக இருந்திருக்கூறரென்று நிருவாகசபையார் தீர்மானித்தால் அந்தமாதச்சந்தா நீக்கப்பெறும். மூன்று மாதம் வரை வெளியூர் போயிருப்பவர்கள் முன்னர் ஒரு வருஷத்திற்கோ ஆறுமாதங்களுக்கோ ஆறுமாதங்களுக்குக்குறைந்த மாதங்களுக்கோ சந்தாசெலுத்தியிருப்பின் அவர்கள் இவ்விடத்திலிருந்த மாதங்களை நீக்கிப் பாக்கி மாதங்கட்கு மாதம் ஒன்றிற்கு அணு 8. ஆக கூடுதலாகிறதொகையை அவர்களின் சந்தாவாக கணக்கில் தாக்கல் செய்துகொள்ளப்பெறும். எந்த மெம்பரும் செலுத்திய தொகையைத் திரும்பிவாங்கப் பாத்தியமல்லாதவராவர்.

F. ஸைப்மெம்பரல்லாத மெம்பர் 10ங் தேதிக்குள் சந்தாச் செலுத்தாவிட்டால் செலுத்தாத ரூ. ஒன்றிற்கு மாதம் ஒன்றிற்கு அணு ஒன்முகச் சேர்த்து வசூலிக்கிறது. மூன்றுமாதம் வரை மேற்கண்டபடி சந்தாச் செலுத்தாமலிருப்பின் அந்த மெம்பரை மெம்பர் ஸ்தானத்தினின்றும் காரியதரிசியே நீக்கிவிட்டு மூன்றுமாதத்திற்குரிய சந்தாவை மாத்திரம் வசூலிக்கிறது.

G. மெம்பர் ஒருவர் மூன்று மாதத்திற்குக் குறையாமல் வெளியூருக்குப் போவதாயிருந்தால் போகுமுன்னரோ பின்னரோ காரியதரிசிக்கு மனுமூலம் தெரியச் செய்துகொள்ள வேண்டியது. அப்படித் தெரியச் செய்யாவிட்டால் முழுச்சந்தா வசூல் செய்கிறது.

H. சந்தாச் செலுத்தும்மெம்பர் காரியதரிசியினிடமோ உப காரியதரிசியினிடமோ செலுத்திய தொகைக்கு ரசீது பெறுகிறது. அப்படி ரசீது பெருமலும் கணக்கில் தாக்கலாகாமலும் செலுத்தியதாய்ச் சொல்லுகிற சந்தா ஒப்புக்கொள்ளத் தகுந்ததில்லை.

8. A. மெம்பராகுமாறும்—நீங்குமாறும்—இச் சங்கத்தின் மெம்பராக இருக்கவிரும்பும் ஒவ்வொருவரும் வாசகசாலையில் விலையில்லாது கொடுக்கும் அப்ளிகேஷன் பாரத்தில் பூர்த்திசெய்து கையொப்பமிட்டு முன்னருள்ள இரண்டு மெம்பர்களின் சிபார்சுக் கையொப்பங்களுடன் வாசகசாலையின் காரியதரிசிக்குச் சேரும்படி செய்யவேண்டும். மெம்பராய்ச்சேருவதற்கு காரியதரிசியின் அனுமதிகிடைத்த இரண்டு வாரங்களுக்குள் ஏழாவது இலக்கத்திற்கண்டபடி சந்தா செலுத்தவேண்டும். இக்காலவரையறைக்குள் தொகைசெலுத்தத்தகுந்த காரணமின்றித் தவறுமானல் காரியதரிசியால் அவர் மனுதள்ளப்படலாம் தகுந்த காரணமிருப்பதாக காரியதரிசிக்குத் தோன்றுமானல் இக்காலவரையறையை அதிகப்படுத்தலாம்.

B. மெம்பராகவிருப்பவர்கள் நீங்கவேண்டின் காரியதரிசிக்கு மனுமூலம் தெரியச்செய்து அதுவரை சந்தா முதலானபாக்கி யிருப்பின் அதைச் செலுத்தி நீங்கவேண்டும்.

9. உத்தியோகம் வகிப்பவர்கள்:—இந்த வாசகசாலையில் ஒரு அக்ராசனுதிபதி, ஒரு உபாக்ராசனுதிபதி,

ஒரு காரியதரிசி, ஒரு உதவிக்காரியதரிசி, ஒரு பொக்ஷதார், ஒரு கணக்குப் பரிசோதகர், ஒரு காப்டன், ஒரு வைஸ்காப்டன், ஒரு நிருவாகசபையார், உபந்யாசக்கமிட்டியார், பாட்மிண்டன் கமிட்டியார், இரண்டு புஸ்தகம் பத்திரிகை பரிசோதகர், ஆகிய இவர்கள் ஒவ்வொருவருஷ ஆவணிமாதத்திலும் மகாஜனசபையார் அபிப்பிராயப்படி நியமிக்கப்பெற்று மேற்படி மாசமுதல் ஒரு வருஷத்திற்கு நியமித்த உத்தியோகங்களை வகிப்பார்கள்.

குறிப்பு:—லைப்மெம்பர்களில் இடமிருந்தாற்றான் மற்ற மெம்பர்களை உத்தியோகஸ்தராய் நியமிக்கலாம். ஆக்டிங்காய் உத்தியோகம் நியமிக்க நிருவாக சபையாருக்கு அதிகாரம் உண்டு.

உத்தியோகம் வகிப்பவர்களின் கடமை,

10. A. அக்ராசநாதிபதி:—இவருக்கு வாசகசாலையின் காரியங்கள் முதலானவைகளை மேற்பார்க்கவும் ஒழுங்கு செய்யவும் அதிகாரமுண்டு.

B. உபஅக்ராசநாதிபதி:—இவருக்குஅக்ராசநாதிபதிக்குள்ள அதிகார முண்டு. ஆனால்அக்ராசநாதிபதியிருக்குங்காலத்து அவருக்கு அடுத்தபடியான அதிகாரமும் இல்லாத காலத்து அவருக்குள்ள அதிகாரமுமுண்டு.

காரியதரிசிகள்:—காரியதரிசி உதவிக்காரியதரிசியாகிய இருவருக்கும் சமமான அதிகாரமுண்டு. ஆனால், காரியதரிசி இருக்குங்காலத்து அவருக்கு அடுத்தபடியான அதிகாரமும், இல்லாத காலத்து அவருக்குள்ள அதிகாரமுமுண்டு.

A. காரியதரிசிகளுக்கு வாசகசாலையின் காரியங்களை நடத்தவும் மேற்பார்க்கவும் அதிகாரமிருப்பதுடன் அபிவிருத்திசெய்யும் கடமையும், சிப்பந்திகளை நடத்தவும், தகுந்த காரணத்தைக்கொண்டு சிப்பந்திகளை ஓர் தடவைக்கு ஒரு நாள் சம்பளத்திற்கு அதிகப்படாமலும் ஒரு மாதத்தில் நாலுநாள் சம்பளத்திற்கு அதிகப்படாத சம்பளத்தை அபராதம் விதிக்கவும் அதிகாரமுண்டு.

B. காரியதரிசிகளே வாசகசாலைக்கு வரவேண்டிய சந்தா முதலானவைகளை வசூலிக்கவும் சிப்பந்தி சம்பளம்வகையறா கொடுக்கவும்சந்தாவரவிற் நுவாசகசாலையிலுள்ள அச்சு ரசீதுப் புஸ்தகத்திலிருந்து வரிசை நம்பருள்ள ரசீது கொடுக்கவும், வசூலாகுந் தொகையில் ஐந்து ரூபாய்க்கு மேலுள்ள தொகையை இரண்டுநாட்களுக்குள் அச்சு இருசால்நாமா மூலம் பொக்கிஷதாரிடம் இருசால் செய்யவும், வழக்கமாயுள்ள சிப்பந்திகளின் சம்பளங்களை இருசால் செய்யும் சமயமாயின் அதற்குள்ளதைமாத்திரம் நீக்கிக்கொண்டு மற்றதொகையை மேற்கண்டபடி இருசால் செய்யவும், மஹாஜன சபையாரோ, நிருவாக சபையாரோ தீர்மானிக்கிற தொகையை விபரத்துடன் அச்சுசெக் மூலம்பொக்கிஷதாருக்குத் தெரிவித்து வாங்கிக்கொள்ளவும், வாசகசாலையின் அபிவிருத்திக்குறிப செல்வு நூதனமாகச் செய்யவேண்டியதிருப்பின் அதற்குள்ள மதிப்புத் தொகையை நிருவாகசபையாரிடமோ மஹாஜனசபையாரிடமோ அநுமதிபெற்றுக் கொள்ளவும், வழக்கமாகவருகிற பத்திரி

கைகளுக்குச் சந்தாச்செலுத்தவும், வாசகசாலையின் வரவு செலவுகளுக்குச் சரியான கணக்கு எழுதிவைக்கவும், எல்லா ரிக்கார்டுகளை பத்திரப் படுத்தவும் கடமையுள்ளவராவர்.

C. வாசகசாலையின் நடவடிக்கைகளில் காரியதரிசிகளில் ஒருவர் கையெழுத்தே ஒப்புக்கொள்ளத் தகுந்ததாகும். மேற்கண்ட ஒருவர் கையெழுத்து மற்றொருவரையும் கட்டுப்படுத்தும். காரியதரிசிகள் மாதமொரு முறை நிருவாகசபையாருக்கு வரவு செலவுகளை ஒப்புவிக்கவும், கணக்குப் பரிசோதகரிடம் கணக்குகளையும் தீர்மானப் புத்தகத்தையும் கொடுத்து வாங்கவும் வேண்டியதுடன் நிருவாக சபையார் ஒருவரை மெம்பராக அங்கீகரித்தார்களானல் அவ்விஷயத்தை மனுதாருக்கு எழுத்து மூலமாய் ஒரு வாரத்திற்குள் அறிவிக்கவேண்டும்.

D. காரியதரிசிகள் வாசகசாலை விஷயமாய்ச் செய்யும் நடவடிக்கைகளெல்லாம் நிருவாக சபையாருடைய மேற்பார்வைக்குள் ளடங்கியவையாகும்.

பொக்கிஷதார்:—இவர் இருசால்நாமா (செலான்) மூலம் பெற்றுக்கொள்ளுந் தொகைகளுக்கும் செக்கிற்கண்டபடி செலவிடுந்தொகைகளுக்கும் சரியானகணக்கு வைத்திருந்து மாதம் ஒரு முறை நிருவாக சபையாரின் பரிசோதனைக்கு அனுப்பவேண்டும். செலான் செக்குகள் வரிசையாய் பைல் செய்யவேண்டும் நிருவாக சபை

யாரால் தீர்மானிக்கப்பெறாத தொகைக்கு எவ்விதத்திலேனும் காரியதரிசிகளின் செக்கைக்கொண்டு மாத்திரம் தொகைகொடுக்கும் கடமையுள்ளவரல்லர். அம்மாதிரி கொடுத்தால் அது ரீடிங்ரூமைக் கட்டுப்படுத்தாது. இவர்கொடுக்கும் தொகைக்குச்சரியான ரசீதுபெற்றுக் கொள்ளவேண்டும். ரசீது இல்லாது கொடுக்கும்தொகை ரீடிங்ரூமைக் கட்டுப்படுத்தாது.

A. காப்டன்:—இவர் சொல்லுக்கு பாட்மின்டன் விளையாடும் மெம்பர்கள் கட்டுப்பட்டவராவர்; கட்டுப்படாவிட்டால் அவரை ஒரு பிளேமுதல் ஒரு நாள் வரை நீக்கிவைக்க காப்டனுக்கு அதிகாரமுண்டு.

B. வைஸ் காப்டன்:— இவருக்கு காப்டனுக்குள்ள அதிகாரங்களுண்டு. ஆனால் காப்டன் இருக்குங்காலத்து அவருக்கு அடுத்தபடியான அதிகாரமும் அவரில்லாத காலத்து அவருக்குள்ள அதிகாரமுமுண்டு.

C. காப்டனும் வைஸ் காப்டனும் பாட்மின்டன் கமிட்டியாருக்குக் கட்டுப்பட்டவராவர்.

D. கணக்குப்பரிசோதகர்:— ரீடிங்ரூமின் வரவு செலவுகணக்குகளைக் கவனிக்கவும், அதன் நடவடிக்கைகளை நிருவாக சபையாருக்குத் தெரிவிக்கவும் கடமையுள்ளவராவர்.

E. புஸ்தகம் பத்திரிகை பரிசோதகர்கள்:—புஸ்தகம் பத்திரிகைகள் சரியாகவுள்ளவாவென்று கவனிக்கவும் அவை சம்பந்தமாக நிருவாகசபையாருக்குத் தெரிவிக்கவும் கடமையுள்ளவர்களாவார்கள்.

F. காரியதரிசி, பொக்ஷதார் மாறுதல்:—காரியதரிசியும் பொக்ஷதாரும் மாறும்பொழுது பின்வரும் காரியதரிசிக்கும் பொக்ஷதாருக்கும் சரியான கணக்கும் வவுச்சர்களும் இருப்புத்தொகையும் கொடுக்கவேண்டியவராவார்.

நிருவாகசபையார்—இவர்கள் சாதாரணமாக மாதம் ஒரு முறைக்குக்குறையாமல் மீட்டிங் கூடுதல்வேண்டும். இம்மீட்டிங்கு காரியதரிசியால் உ-நாள் முன் அம்மீட்டிங்கில் தீர்மானம் பெறவேண்டிய முக்கியவிஷயங்கள் விவரித்துள்ள அறிவிப்புமூலம் கூட்டப்பெறும். அவசர காரியங்களிருப்பின் காரியதரிசியால் கஉ-மணி நேரத்திற்குமுன் அறிவிப்புமூலம் கூட்டப்பெறும். மெம்பர்களில் ஐந்துமெம்பர்களாயினும் பிரஸிடெண்டாயினும் வைஸ் பிரஸிடெண்டாயினும் நிருவாகசபையார் அவசரமாகக் கூடவேண்டுமென்று விரும்பிக் காரியதரிசிக்கு எழுத்துமூலம் தெரியச்செய்தால் காரியதரிசி மேற்சொன்னபடி மீட்டிங்கூட்டலாம். நிருவாகசபையாரின் ஐந்திலிரண்டு பாகத்துக்குக் குறைந்த மெம்பர்களிருப்பின் அன்று மீட்டிங்கை மாற்றி அடுத்தமீட்டிங் கூட்டவேண்டும். பிரஸிடெண்ட் வைஸ் பிரஸிடெண்ட் பொக்

ஷதார் தவிர மற்ற நிருவாகசபை மெம்பர் ஒருவர் 3-மாதம் தொடர்ச்சியாய் ஆஜராகாவிடில் அந்த மெம்பர் அவ்வுத்தியோகத்தினின்றும் நிருவாகசசபையாரால் நீக்கப்பெறுவர்.

A. நிருவாகசபையாருடைய கடமைகள்:—காரிய தரிசியால் அனுப்பப்பெறும் மெம்பர்களாகச்சேருவோரின் மனுவை அங்கீகரித்தல், தள்ளுதல்.

B. ரீடிங்ரூமுக்கு வேண்டிய செலவுகளை முன்னதாக சாங்கிஷன் செய்தல்.

C. ரீடிங்ரூமுக்குவேண்டிய சிப்பந்திகளை நியமித்தல் நீக்குதல் அபராதம் விதித்தல் சிப்பந்திகளின் சம்பளநிர்ணயஞ்செய்தல் கூட்டுதல் குறைத்தல் முதலியன.

D. காரியதரிசியின் தீர்மானங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் அப்பீல் செய்தால் அதைவிசாரித்துத் தீர்மானித்தல்.

E. மெம்பர்களின் கம்பிளேயிண்ட் முதலானவைகளை விசாரித்து தீர்மானித்தல்.

F. சங்கத்தின் வரவு செலவுகளையும்பொக்ஷதார் கணக்குகளையும் மற்ற விஷயங்களையும் மாதம் ஒருமுறைக்குக் குறையாமல் கவனித்துச் சீர்திருத்தல்.

G. பாட்மிண்டன் சம்பந்தமான விளையாட்டுக்

களைத் தீர்மானித்தலும் அதற்கு வேண்டிய செலவு களை அதிகரித்தலும் குறைத்தலும்.

H. ரீடிங்ரூமும் அதன் திரவியமும் விருத்தியாவதற்கு வேண்டிய பிரயத்தனஞ்செய்தல்.

I. ரீடிங்ரூமைச் சார்ந்த காபிக்ளப் ஏற்படுத்துதல், அதன் நடவடிக்கைகளை விதித்தல். அதிகரித்தல் குறைத்தல் நீக்குதல்.

J. ரீடிங்ரூமின் எல்லாக்காரியங்களையும் நிர்வகித்தல்.

K. பாட்மிண்டன் கமிட்டியாரின் தீர்மானத்திற்கு அப்பீல் இருந்தால் அதை விசாரித்துத் தீர்மானித்தல்.

L. உத்தியோகத்திலுள்ள ஒருவருடைய ஸ்தானம் காரணத்தாலோ காரணமின்றியோ காலியாகுமானால் அந்த ஸ்தானத்தை வேறொருவர் டெம்பரெரியாக வகிக்கும்படி தீர்மானிக்கவும் அல்லது அந்த ஸ்தானத்திற்கு மஹாஜனசபையாரின் ஓட்டுப்படி நியமிக்கிறதென்று தீர்மானிக்கவும் நிருவாகசபையாருக்கு அதிகாரமுண்டு.

M. வழக்கப்படியுள்ள செலவிற்குள்ள தொகை தவிர ஒரு தடவையில் ரு௰-ரூபாய் வரையும் ஒரு வருஷத்தில் பலதடவைகளாக ரு௱-ரூபாய்வரையும் சாங்ஷன் செய்ய அதிகாரமுண்டு.

N. இந்த நிர்வாக சபை மீட்டிங்கில் காரியதரிசிகளில் ஒருவராகிலும் ஆஜரானால்தான் மீட்டிங் நடைபெறலாம். பிரஸிடெண்டு ஆஜராக இருக்கும்பொழுது அவரும் அவரில்லாதபொழுது வைஸ்பிரஸிடெண்டும் சேர்மனாயிருப்பார்கள். ஷை இருவரும் இல்லாவிட்டால் ஷை சபை மெம்பர்களில் ஒருவரை அந்த மீட்டிங்குக்கு மாத்திரம் மெம்பர்களின் அபிப்பிராய பேதமிருப்பின் மெஜாரிட்டிப்படியும் சேர்மெனாகத் தெரிந்தெடுத்துக்கொள்ளலாம்.

Q.23.4.14 N21

O. காரியதரிசியின் நடவடிக்கையைப் பற்றி அப்பீலிருப்பின் அந்த அப்பீலுக்கு மாத்திரம் காரியதரிசியல்லாத மற்ற மெம்பர்களே தீர்மானிக்கவேண்டியவர்கள்.

P. நிருவாக, சபையார் கூடியுள்ள மெம்பர்களுக்கு எந்தவிஷயத்திலாவது அபிப்பிராயபேதமிருந்து ஓட்டுக்கு வருவதாயிருந்தால் பிரஸிடெண்டுக்கு மாத்திரம் ஒரு ஓட்டு அதிகமாகவுண்டு.

Q. இந்த நிர்வாக சபையானது மஹாஜனசபையின் அதிகாரத்திற்குள்ளடங்கியதாகும்.

175432

பாட்மின்டன் கமிட்டியார்:—(a) இக்கமிட்டியார் கோர்ட் சம்பந்தமான நடவடிக்கைகளைக் கவனிக்கவும் காப்டன்களுடையவும் விளையாடும் மெம்பர்களுடையவுமான நடவடிக்கைகளை கோர்ட் சம்பந்தப்பட்டமட்

டில் சீர்திருத்தவும் தகுந்த காரணத்தைக்கொண்டு காப்டனை ஒருவாரம் வரை நிறுத்தவும் விளையாடுவோரை ஒரு மாதம் வரை நிறுத்தவும் வேறு காப்டன் டெம்பரெரியாக நியமிக்கவேண்டியதிருப்பின் நிருவாக சபையாருக்குத் தெரிவிக்கவும் ஒரு தடவையில் ரூ. வரைக்கும் ஒரு வருஷத்தில் பல தடவையாக ரூ வரைக்கும் செலவு செய்யவும் கடமையுள்ளவராவர்.

a. ஷை பாட்மின்டன் கமிட்டியானது நிருவாக சபைக்கும் மஹாஜனசபைக்கும் உள்ளடங்கியதாகும்.

உபந்நியாசக் கமிட்டியார்:—(a) இக்கமிட்டியார் ஒரு மாதத்திற்கொருமுறையோ அவசியமென்று தோன்றினால் பலமுறையோ வித்துவான்களை வரவழைக்கவும் அவர்களைக்கொண்டு சமயத்திற்கேற்ப உபந்நியாசங்கள் செய்யச்செய்யவும் துண்டுப்பத்திரிகை அச்சிட வேண்டியதிருப்பின் அச்சிட்டு வெளியிடவும் ஒரு தடவையில் ரூ வரைக்கும் ஒரு வருஷத்தில் பல தடவையாக ரூ வரைக்கும் செலவு செய்யவும் கடமையுள்ளவராவர்.

(b) ஷை உபந்நியாசக் கமிட்டியானது நிருவாக சபைக்கும் மஹாஜனசபைக்கும் உள்ளடங்கியதாகும்.

மஹாஜனசபை மீடிங்குகளின் காரியங்களெல்லாவற்றையும் கவனித்தல் சீர்திருத்துதல் நிருவாகசபையின்

தீர்மானங்களுக்கு அப்பீல் விசாரித்துத் தீர்மானித்தல் நிருவாக சபையாருடைய அதிகாரத்திற்கு மேற்பட்ட செலவு நேரின் அதை சாங்ஷன் செய்தல், எந்தச்செலவையும் குறைக்கவேண்டிய திருப்பின்குறைத்தல், தகுந்த காரணத்தைக் கொண்டு யாதொரு மெம்பரை விலக்கவேண்டியிருப்பின் விலக்குதல் ரீடிங்ரூமின் வரவு செலவுகளை அங்கீகரித்தல் ரீடிங்ரூமையும் அதன் திரவியத்தையும் சமயத்திற்கேற்ப விருத்தி செய்யவேண்டிய வழிகளில் முயற்சி செய்தல் முதலியனவாம்.

A ஷை மஹாஜனசபையாரின்கடமைகள்:—வருஷம் ஒருமுறைக்குக் குறையாமலும், அவசியமிருப்பின் வேண்டிய சமயங்களிலும் நிருவாக சபையார் கூடவேண்டுமென்று தீர்மானித்து காரியதரிசிமூலம் அறிவிக்கிற சமயங்களிலும், தகுந்த காரணத்தைக் காட்டி 7 மெம்பர்கள் கூடவேண்டுமென்ற எழுத்துமூலம் காரியதரிசிக்குத் தெரிவித்து அக்காரணத்தைக் காட்டிக் காரியதரிசியறிவிக்கிறகாலங்களிலும் அவசரமென்று தோன்றி 24-மணி நேரத்திற்குமுன் காரியதரிசி காரணத்தை விவரத்துடன் தெரிவித்து அறிவிக்கிற சமயங்களிலுங் கூட வேண்டியவராவர்.

B ஷை சபையாரின் மீட்டிங்கில் பிரசிடெண்ட் இருப்பின் அவரில்லாதபொழுது வைஸ்பிரஸிடெண்டும் சேர்மெனக இருப்பார்கள் மேற்கண்ட இருவரும் இல்

லாவிட்டால் ஆஜரா யிருக்கிறமெம்பர்களில்ஒருவரையும், அபிப்பிராயபேதமிருப்பின் மெஜாரிட்டிப்படி ஒரு மெம் பரையும் சேர்மெனாக நியமித்துக்கொள்ளலாம்.

C. இரண்டுகாரியதரிகளும் இல்லாத சமயத்தி லும் இவ்வூரிலிருக்கிற மெம்பர்களில் ஐந்தில் இரண்டு பாகங்களுக்குக் குறைந்த மெம்பர்கள் ஆஜராகியிருக்கிற சமயத்திலும் அந்த மீட்டிங்கை அடுத்தமுறை நடத்த வேண்டும்.

குறிப்பு:—டெலிவர் புஸ்தகத்தில் கையெழுத்துச் செய்து மீட்டிங்கிற்கு வராத மெம்பரை வந்ததாகவே பாவிக்கப் பெறும் எந்த மீட்டிங்கிலும் ஆஜர் புஸ்தகத் துக்கையெழுத்தை தீர்மானத்தின் கையெழுத்தாகவே பாவிக்கப்பெறும்.

D. மஹாஜன சபையிற் கூடியுள்ள மெம்பர்க ளுக்கு எந்த விஷயத்திலாவது அபிப்பிராயபேதமிருந்து ஓட்டுக்கு வருவதாயிருந்தால் பிரஸிடெண்டுக்கு மாத்தி ரம் ஒரு ஓட்டு அதிகமாகவுண்டு. மற்ற உத்தியோகத்தி லுள்ள மெம்பர் ஒருவருக்கும் உத்தியோகத்திலில்லாத மெம்பர் ஒருவருக்கும் ஒரு ஓட்டுக் கொடுக்கும் பாத்தி யமில்லாதவராவர்.

E. எந்த சமயத்திலு எந்தவிஷயங்களை சேர்க்க வேண்டுமானாலும் திருத்தவேண்டுமானாலும் நீக்கவேண் டுமானாலும் திருத்தவேண்டுமானாலும் மேற்கண்ட விப

ரப்படிக் கூடித்தீர்மானிக்க மஹாஜன சபையாருக்கு பூரண அதிகாரமுண்டு.

F. மஹாஜன சபையார் தீர்மானித்த விஷயங்களில் மேற்கண்டபடி மாற்றவேண்டியது முதலானவையிருந்து செய்யின், அதுவரை முந்தியதீர்மானமே ஊர்ஜிதத்திலிருக்கும்.

G. மஹாஜன சபைக்கூட்டத்தில் மேற்சொல்லியபடி இவ்வூரிலிருக்கிற மெம்பர்களில் ஐந்தில் இரண்டு பாகங்களுக்குக் குறையாமல் ஆஜராகியிருந்தாலும் அல்லது ஆஜரானவுடன் ஆஜர் புத்தகத்தில் வழக்கம்போல் கையெழுத்துச் செய்து பின்னர் ஆஜர் இல்லாவிட்டாலும் அவர்கள் ஆஜரிலிருப்பதாகவே பாவிக்கப்பெறுவதுடன் எந்த விஷயத்திலாவது அந்த மீட்டிங்கில் அபிப்பிராயபேத முண்டாகி ஓட்டுப்படி தீர்மானித்தால் முன் ஆஜர் புத்தகத்தில் கையெழுத்துச் செய்து ஆஜரில்லாதவர்களின் ஓட்டை ஆஜரிலுள்ளவர்களில் எடுக்கும் அதிக ஓட்டுகளுடன் சேர்ந்துக் கொள்ளப்பெறும்.

கம்ப்ளேண்டுகள்:—மெம்பர்களாலும் ஏனையோராலும் கொடுக்கும் கம்ப்ளேண்டுகளை காரியதரிசிக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும். அப்படிக் கொடுக்கும் கம்ப்ளேண்டுகளில் தங்களால் தீர்மானஞ்செய்யக் கூடியவைகளை காரியதரிசி தீர்மானஞ் செய்யலாம். மற்றவைகளை நிருவாக சபையாரின் தீர்மானத்திற்கு அனுப்ப

வேண்டும். காரியதரிசியின் தீர்மானம் எழுத்து மூலமாயும் நிருவாக சபையின் தீர்மானமும் மஹாராஜன சபையின் தீர்மானமும் போர்டிலும் கம்ப்ளேண்டுக் காரர்களுக்குத் தெரிவிக்கப்பெறும்.

A. கம்ப்ளேண்டுக்காரர்கள் காரியதரிசி தீர்மானிப்பதாயிருந்து தீர்மானித்தது சம்மதியில்லாவிட்டால் நிருவாக சபையாருக்கு எழுத்துமூலம் அப்பீல் செய்துகொள்ளலாம். அவர்கள் தீர்மானமும் சம்மதியில்லாவிட்டால் மஹாராஜன சபையாருக்கு எழுத்துமூலம் அப்பீல் செய்துகொள்ளலாம்.

B. பாட்மிண்டன்கோர்ட் சம்பந்தமாய்க்கம்ப்ளேண்டு செய்வோர் அதன் காரியதரிசிக்கு அனுப்பவேண்டும். அவர் தீர்மானம் சம்மதியில்லாவிட்டால், நிருவாக சபையாருக்கும், நிருவாக சபையார் தீர்மானம் சம்மதியில்லாவிட்டால் மஹாராஜன சபையாருக்கும் அப்பீல் செய்துகொள்ளலாம். கம்ப்ளேண்டுக்கார மெம்பரும் அந்தக் கம்ப்ளேண்டில் மற்றமெம்பர் காட்டப்பெற்றிருந்தால் அந்த மெம்பரும் அவ்விஷயத்திற்கு ஓட்டுகொடுக்கப் பாத்தியமில்லாதவராவர்.

சிப்பந்திகள்.—ரூமின் சிப்பந்திகள் காரியதரிசிக்கும் அவர்கள் மூலம் நிருவாக சபையாருக்கும் உள்ளடங்கியவராவர். ஏனைய மெம்பர்களுக்கு சிப்பந்திகளைக் கண்டிக்கவும் அபராதம் விதிக்கவும் அதிகாரம் கிடையாது.

பத்திரிகை.—மஹாஜன சபையாருக்கும் நிருவாக சபையாருக்கும் உசிதமென்று தோன்றுகிற பத்திரிகைகள் தருவிக்கப்பெறும்.

A. பத்திரிகைகளின் ஒவ்வொரு பிரதியும் மேஜையின் மேல் வைக்கப்பெறும். அடுத்த பிரதிவரும்வரை அந்தப் பிரதியை யாரும் ரூமிற்கு வெளியிற் கொண்டு போகக்கூடாது. நடப்பிலிருக்கிற பிரதிக்கு முந்திய பிரதியோ மற்ற பிரதியோ ஒரு பிரதிமாத்திரம் கொண்டுபோகலாம்.

B. மெம்பர்கள் பத்திரிகையை யெடுத்துப் போவதாயிருந்தால் ஒரு பிரதியைமாத்திரம் எடுத்துக்கொண்டு அதற்காகவுள்ள பதிவு புஸ்தகத்தில் கையெழுத்துச் செய்யவேண்டும். அல்லது அப்பிரதியை கையொப்பக் கடிதமூலம் பெற்றுக்கொள்ளலாம். அந்தப்பிரதியை ஒரு நாளில் திருப்பியனுப்பவேண்டும். அப்பிரதி கிழிந்துபோனாலும் அழிவிட்டாலும் அது வரக்கூடிய நாட்களுக்குள் தருவித்துக்கொடுக்கவேண்டும். அவர்கள் தருவித்துக்கொடுக்காவிட்டால் அப்பிரதிக்குள்ள தொகை செலவுகூட வசூலிக்கப்பெறும்.

புஸ்தகசாலை:—இதில் பலவழிகளில் நல்லஅறிவை விருத்திசெய்யக்கூடிய புஸ்தகங்கள் தொகுத்துவைக்கப்பெறும். இப்புஸ்தகங்களிலொன்றை மெம்பர்கள் வீட்டுக்குக் கொண்டுபோகவேண்டுமானால் பத்திரிகைக்

குக் காட்டியபடி பெற்றுக்கொண்டு ஒரு வாரத்திற்குள் திருப்பி அனுப்பிவிடவேண்டும். மற்றவிஷயங்கள் பத்திரிகைக்குக் காட்டியபடி பாவிக்கப்பெறும்.

பத்திரிகையோ புஸ்தகமோ எடுத்துப்போவோர் பதிவுபுஸ்தகத்தில் கையெழுத்துச்செய்வோர் அவை திரும்பிவந்தது தெரிவதற்காக மேற்படி புஸ்தகத்தில் வரவுவைக்கவோ அல்லது அதுவரப்பெற்றதாகக் காரியதரிசியிடம் ஆதரவு பெறவோ கடமையுள்ளவராவர். மேற்கண்ட இரண்டுமின்றி இருப்பின் அவை திருப்பியனுப்பாததாகவே பாவிக்கப்பெறும்.

பத்திரிகை புஸ்தகங்களை மெம்பரல்லாதாருக்கு மேற்கண்டகாரியதரிசிக்கு நோக்கமிருப்பின் கொடுத்து வாங்கலாம். அதற்குப் பொறுப்பாளி காரியதரிசியாவர். கவர்ண்மெண்ட் உத்தியோகஸ்தருக்குக்கொடுத்து வாங்கநேரின் அதன் பொறுப்பு சபைச்சேர்ந்ததாகும்.

தனவைசிய ஊழியன் பிரஸ், காரைக்குடி-111-200-21.